StudentBounty.com

44

Register Number

# பகுதி III — சிறப்புத் தமிழ்

# Part III — ADVANCED LANGUAGE — TAMIL

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 180

## பகுதி - I

**குறிப்பு :** பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும். பொருந்தும் விடையினைக் குறிக்கும் எழுத்தை மட்டும் வினா எண்ணோடு இணைத்து விடைத்தாளில் எழுதவும்.

30 × 1 = 30

1. 'தாயே தமிழே ... ' எனும் மொழி வாழ்த்துச் செய்யுளில் பயன்படுத்தப்பட்டுள்ள நான்கு சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அணி அடிப்படையில் மாறுபட்ட சொல் எது ?

   அ) தாயே ஆ) உயிரே

   இ) தமிழே ஈ) சேயேன்.

2. மாறியிருப்பவர் யார் ?

   அ) நான்முகனார் ஆ) நக்கீரர்

   இ) செந்நாப்போதார் ஈ) பெருநாவலர்.

3. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
   தேறியார்க் குண்டோ தவறு – இக்குறளின் பொருளை அறிந்து கீழுள்ள கூற்றுகளுள் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும் :

   அ) அளித்தஞ்சல், தெளித்தசொல் ஆகியன இரண்டும் தலைவனுக்குரியனவாகும்

   ஆ) அளித்தஞ்சல் தலைவனுக்கும் தெளித்தசொல் தலைவிக்கும் உரியன

   இ) அளித்தஞ்சல் தலைவிக்கும் தெளித்தசொல் தலைவனுக்கும் உரியன

   ஈ) அளித்தஞ்சல், தெளித்தசொல் ஆகியன இரண்டும் தலைவிக்கு உரியன.

4. கலித்தொகையில் தோழி, தன்னையும் தலைவியையும் தாழ்த்திக் கொள்வதாக அமையும் அடி எது ?

   அ) பொறை எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

   ஆ) முறை எனப்படுவது கண்ணோடாதுயிர் வௌவல்

   இ) அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

   ஈ) ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்குதவுதல்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

5. கணியன் பூங்குன்றனாரின் 'நீர்வழிப்பட்ட புணை' எனும் புறநானூற்றுப் பாடலடியின் தாக்கம் பெற்றுள்ளது யாது ?

அ) சாதலும் பிறத்தல் தானும் தம்வினை

ஆ) தீம்புனலில் செல்மரம் போல

இ) கல்பொருது இரங்கும் கதம்வீழ் அருவி

ஈ) நீரின்றியமையா உலகம்.

6. மணிமேகலையிடம் மாதவி 'நிகர்மலர் நீயே கொணர்வாய்' என்றாள் – இவ்வாறு கூறுவதன் நோக்கம் யாது ?

அ) மணிமேகலையின் துயரை மாற்றுதல்

ஆ) மாதவி மலர்களை விரும்புதல்

இ) மாதவியின் துயரை மாற்றுதல்

ஈ) மணிமேகலை மலரை விரும்புதல்.

7. போர்முனையில் இறக்கும் தருவாயில் கன்னன், கண்ணனிடம் வேண்டுவது யாது ?

அ) எல்லாப் பிறவியிலும் இரப்பவர்களுக்கு அளிப்பதற்குச் செல்வம்

ஆ) இரப்பவர்களுக்கு வாரிவாரி வழங்கும் மனம்

இ) இப்பிறப்பில் செஞ்சொற்றுக் கடன் கழிக்கும் இதயம்

ஈ) பெறுதற்கு எட்டாத் திருமாலின் திருக்கோலக் காட்சி.

8. 'கரங்கள் உழைப்பால் உரமேற்று
காலம் பணியும் சிரமேற்று' - இவ்வடி உணர்த்தும் கருத்து யாது ?

அ) உயர்வுக்கு வழி உழைப்பு

ஆ) எல்லாரும் உழைத்தல் வேண்டும்

இ) உழைப்பால் உடல் உறுதிப்படும்

ஈ) உழைப்பிற்குக் கைகளே உதவும்.

9. பழமொழி பயன்படுத்தப்பட்டுள்ள பாடலடி எது ?

அ) இறைக்கின்ற கிணற்றிலே நீர் சுரப்பதைப் போல

ஆ) தருகின்ற குருதியே உயிரைக் காக்கும்

இ) மனிதனுக்கு மனிதன்தான் உதவல்

ஈ) மணிநேரம் வாழ்ந்தாலும் மற்றவர்க்காய்.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

10. 'சுடரை உலக முதலைத் துயருள் அழுக விதிசெய் கொடிய கயவர்' – பெண்களின் தற்சார்பு உடைமையினைக் குறிக்கும் உருவம் எது ?

அ) சுடர் ஆ) முதல்

இ) துயர் ஈ) விதி.

11. அழகிய சிற்றம்பலக் கவிராயர் நல்ல செல்வர். அவர் குடும்பத்தில் கலைமகளும், திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர் – இப்பகுதியில் அமைந்துள்ள சிறப்புக் குறிப்பு கொண்டுள்ள தொடர் எது ?

அ) அழகிய சிற்றம்பலக் கவிராயர் ஆ) நல்ல செல்வர்

இ) கலைமகளும் திருமகளும் ஈ) ஒருங்கே களிநடம்.

12. 'பரம்பரைக் குணம்' எனும் கட்டுரையில் உ.வே.சா குறிப்பிடும் வண்டிக்காரனின் பணிவும், உயர்ந்த பண்பாட்டு மரபும் அவன் கூறியதான கீழுள்ள எம்மொழியால் வெளிப்படுகிறது ?

அ) இல்லை இப்பொழுது எனக்குப் பசியில்லை

ஆ) ரூபாய் தங்களிடமே இருக்கட்டும் 'நான் போய் வருகிறேன்'

இ) தாங்கள் வேறு ஒன்றும் நினைத்துக் கொள்ளக்கூடாது

ஈ) போகும் வழியில் தெரிந்தவர்கள் வீட்டில் சாப்பிடுவேன்.

13. ஈழத் தமிழரின் பேச்சு முறையில் மலையாள ஒலிப்பு முறை கலந்துள்ளதைக் காட்டும் சொல்

அ) மனை ஆ) பேனை

இ) அவதானி ஈ) ஓடர்.

14. சாலை, சாலினியாரின் கீழுள்ள வாக்கியங்களுள் எது மாறுபட்ட அமைப்புடைய மொழி நடையில் அமைந்துள்ளது ?

அ) ஈழத் தமிழரின் பேச்சு முறையில் சிறிது மலையாள ஒலிப்புமுறை கலந்திருக்கிறது

ஆ) ஆங்கில தமிழ்ச் சொற்களின் நமது ஆகாரம் அவர்களுக்கு ஒகாரமாகிறது

இ) நாம் கவனிக்கிறோம், அவர்கள் அவதானிக்கிறார்கள்

ஈ) சந்து வழியே போவோம் என்பதைச் சந்தாலே போவோம் என்கிறார்கள்.

15. ஒரு செயலைப் பற்றித் தெரிந்து கொள்ளும் அறிவு செயலறிவு. தெரிந்து கொண்ட அறிவைச் செயலாகச் செய்யும் பொழுது செயலாகி விடுகிறது – இப்பகுதியில் 'மாற்று' என்னும் பொருளில் எடுத்தாளப்பட்ட சொல் எது ?

அ) பற்று ஆ) தெரி

இ) அறி ஈ) செய்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

16. தவறில்லாச் சொல்லாட்சி பெற்றிருப்பதைத் தேர்ந்தெடுக்கவும் :

அ) காந்தியடிகள் மனத்திட்பம் கொண்டவர். எனவே இறுதி வரையிலும் போராடினார்

ஆ) விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்றது. எனவே மக்கள் அயராது உழைத்தனர்

இ) நாம் எல்லாரும் நல்லவரே. எனவே அவரைப் பற்றி அறிந்திருந்தோம்

ஈ) அவன் விளக்கம் தெளிவாக இருந்தது. எனவே நன்றாக விளக்கினார்.

17. எண்ணும்மை மட்டுமே பெற்றுள்ள வாக்கியம் எது ?

அ) ஞாயிற்றைத் தன்வாழ்வுக்குத் துணையாகவும் கொண்டான்

ஆ) உள்ள நிறைவோடு தன்னை வாழ்விக்கும் இறையை எண்ணிப் பார்த்தார்

இ) பிற இயற்கை சக்திகளையும் உள்ளத்தில் எண்ணினான்

ஈ) அப்போது அவன் வியப்பையும், மகிழ்வையும் பெற்றான்.

18. கீழுள்ளனவற்றுள் அப்பர் ( திருநாவுக்கரசர் ) கூற்று எது ?

அ) அஞ்சியானும் அன்பு பட்டாகிலும் தெய்வத்தை நினை

ஆ) வருணன் மேய பெருமணல் உலகமும்

இ) என்றோள் ஈசற்கு எழில் மடம் எழுபது

ஈ) செம்மின் திருமுடி எம் திருமாலுக்குச் சேருமே.

19. அழகியலும், அறிவியலும் அவரின் ( பாரதிதாசனின் ) கருத்துக்கும், கொள்கைக்கும் அடிபணிந்து வருவதைக் காணலாம் -

இவ்வாக்கியம் உணர்த்தும் கருத்துக்குப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்கவும் :

அ) அழகியலையும், அறிவியலையும் தம் கருத்துக்கேற்ப மாற்றினார்

ஆ) அழகியலும், அறிவியலும் பாவேந்தரின் படைப்புகளின் உட்பொருள்களாயின

இ) அழகியல், அறிவியல் கருத்துகள் பாரதிதாசனின் கவிநயத்தினைக் குறைக்கவில்லை

ஈ) அழகியல், அறிவியல் கருத்துகள் பாவேந்தர் கவிநயத்தால் சிறப்படையாதிருந்தன.

20. சித்த மருத்துவத்திற்கு பிறிதொரு பெயர்

அ) ஆயுர்வேதம் ஆ) தமிழ் மருத்துவம்

இ) அல்லோபதி ஈ) யுனானி.

21. முறையாகப் பொருந்தியிருப்பது எது ?

அ) பொருளாகு பெயர் – மஞ்சள் பூசிய முகம்

ஆ) இடவாகு பெயர் – நாட்டு மக்கள் நல்லவர்கள்

இ) காலவாகு பெயர் – விலைக்கு வாங்கிய நூல்

ஈ) சினையாகு பெயர் – பொழுது புலர்ந்தது.

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

22. 'பொருள் முதல் ஆறினும்' - இந்நூற்பா அடியில் குறிக்கப்பெறும் ஆறனுள் ஒன்று எது ?

அ) கருவி ஆ) குணம்

இ) செய்பவன் ஈ) செயல்.

23. இடைச்சொல் வகைகளின் எண்ணிக்கை

அ) 7 ஆ) 8

இ) 9 ஈ) 10.

24. கீழ்வருவனவற்றுள் உற்றறிதல் மட்டும் பெற்ற உயிர் எது ?

அ) மரம் ஆ) சங்கு

இ) எறும்பு ஈ) தும்பி.

25. கீழ்வருவனவற்றுள் பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல் எது ?

அ) சால ஆ) உறு

இ) தவ ஈ) கடி.

26. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு – இதனுள் அமைந்த அணி

அ) உவமையணி ஆ) வேற்றுமையணி

இ) முன்னவிலக்கணி ஈ) பிறிது மொழிதல் அணி.

27. கீழுள்ள எத்தொடர்களுள் எது பிரிமொழிச் சிலேடைக்கு உரியதாகும் ?

அ) பலகை ஆ) நிறம்பச்சை

இ) விளக்கொளி ஈ) தெருண்டோர்.

28. மாறுபட்டுள்ள பெயரெச்சம் எது ?

அ) ஆடிய ஆ) கரிய

இ) எழுதுகிற ஈ) வரும்.

29. தவறாகப் பொருத்தப்பட்டிருப்பது எது ?

அ) பிரிந்தவரும் பேசினர் — ஒன்றா வஞ்சித்தளை

ஆ) காட்சிக்கவர் எளியரானார் — ஒன்றிய வஞ்சித்தளை

இ) வேண்டியருமே எனக்கு — ஒன்றிய வஞ்சித்தளை

ஈ) என்றுமுளவே நன்று — ஒன்றா வஞ்சித்தளை.

30. வஞ்சித்துறைக்கும், வஞ்சிவிருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு கீழுள்ளனவற்றுள் எதனால் அமையும் ?

அ) அடிவகை ஆ) பாடல் எண்ணிக்கை

இ) சீர்வகை ஈ) அடி எண்ணிக்கை.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - II

குறிப்பு : பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களில் ( 31 ஆம் வினா தவிர்த்து ) விடை தருக.

பிரிவு - அ ( 31-32 ) இரு வினாக்களுக்கும் விடையளி. 2 × 5 = 10

31. 'மாரத வீரர் ......' எனத் தொடங்கும் நாட்டுவாழ்த்துச் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

*அல்லது*

'செல்லாமை ......' எனத் தொடங்கும் பிரிவாற்றாமை அதிகாரக் குறளையும், 'கோள்' என முடியும் சொல்வன்மை அதிகாரக் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

32. 'கடிமரம் வருத்தத் தந்தியாம் பிணித்த' — புறநானூற்றிலுள்ள இவ்வடி உணர்த்தும் பண்டையச் சமுதாய நிலை யாது ?

*அல்லது*

பாரதியாரின் பாஞ்சாலி சபதப் பகுதியில் துரியோதனனைத் தீயவன் என உணர்த்தும் பகுதிக்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

பிரிவு - ஆ ( 33-34) இரு வினாக்களுக்கும் விடையளி. 2 × 5 = 10

33. அன்னம், ஆனந்தம், உத்தரவு, உதாரணம் ஆகிய சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள் தருக.

*அல்லது*

பனாட்டு, பனங்கட்டி ஆகிய சொற்களை எடுத்துக்காட்டி சாலை, சாலினியார் விளக்குவது யாது ?

34. பாரதிதாசனின் ஒருமைப்பாட்டுணர்வு பற்றித் திலகவதி அவர்கள் குறிப்பது யாது ?

*அல்லது*

ஆபிரகாம் பண்டிதர் பிறந்த ஊரின் சிறப்புகள் யாவை ?

பிரிவு - இ ( 35-38) எவையேனும் இரு வினாக்களுக்கு விடையளி. 2 × 5 = 10

35. ஆகுபெயர் என்றால் என்ன ? இருபெயரொட்டு ஆகுபெயரை விளக்குக.

36. உரிச்சொல்லின் வகைகளைக் கூறி எடுத்துக்காட்டுத் தருக.

37. தற்குறிப்பேற்றவணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38. புதுக்கவிதையின் வடிவம், உள்ளடக்கம், உத்தி பற்றி விளக்குக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - III

*குறிப்பு* : பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்கள் அளவில் விடை தருக.

பிரிவு - அ பின்வரும் வினாவிற்கு விடையளி. 1 × 10 = 10

39. சொல்வன்மைக்குத் திருவள்ளுவர் தரும் விளக்கம் யாது ?

*அல்லது*

புத்த பெருமானின் பெருமை மணிமேகலை மலர்வனம் புக்க காதையில் எவ்வாறு உணர்த்தப்படுகிறது ?

பிரிவு - ஆ பின்வரும் வினாவிற்கு விடையளி. 1 × 10 = 10

40. உழைப்பின் பெருமையைப் பாவலரேறு திருக்குறள் வழி எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

*அல்லது*

சங்ககாலச் சிறுதெய்வங்களாகப் பேராசிரியர் ச. கணபதிராமன் குறிப்பன யாவை ?

பிரிவு - இ எவையேனும் இரு வினாக்களுக்கு விடை தருக. 2 × 10 = 20

41. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய ஐந்து ஐந்திணைகள் யாவை ? அவற்றைப் பற்றி விளக்குக.

42. சோழர் காலச் சைவ சமய இலக்கியங்கள் பற்றி எழுதுக.

43. நும் பாடப் பகுதியிலுள்ள வைணவ இலக்கியங்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

44. சிலப்பதிகாரத்தின் இலக்கியவளம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

பிரிவு - ஈ பின்வரும் வினாக்களுக்கு விடையளி.

45. கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கட்டுரை எழுதுக. ( கட்டுரை உவமை, மரபு, பழமொழி, இன்/இணைத்தொடர் ஆகியன பெற்று அமைதல் வேண்டும் ). 1 × 10 = 10

i) வேற்றுமையில் ஒற்றுமை

ii) விடுதலை இயக்கத்தில் தமிழகம்

iii) சுற்றுச்சூழல் கல்வி.

46. உங்கள் பகுதிக்கு நூலக வசதி வேண்டிப் பொது நூலக இயக்குநருக்கு விண்ணப்பம் எழுதுக. 1 × 10 = 10

*அல்லது*

உன்னுடைய கல்வித் தகுதிகளைக் குறிப்பிட்டுத் 'தட்டச்சர்' பணி வேண்டித் தனியார் நிறுவனமொன்றிற்குக் கடிதம் வரைக.

[ Turn over

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - IV

*குறிப்பு* : பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்கள் அளவில் விடை தருக.

4 × 15 = 60

47. திருக்குறள் பிரிவாற்றாமை அதிகாரத் தலைவியின் பண்பின் சிறப்பினை விளக்குக.

*அல்லது*

தோழியின் அறிவு மேன்மையை நெய்தற்கலி வாயிலாக விளக்குக.

48. கண்ணனின் பெருமைகளை வில்லிபுத்தூரார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

*அல்லது*

டாக்டர் சே. சாதிக் அவர்கள் மனித நேயச் சிந்தனையாளர் என்பதை அவருடைய 'ஆற்றலைப் போற்றுவீர் !' கொண்டு விளக்குக.

49. 20-ஆம் நூற்றாண்டில் தொடக்ககால உரைநடையில் பிறமொழிச் சொற்கள் மலிந்திருந்தமையினை டாக்டர் உ. வே. சா. வின் கட்டுரை கொண்டு வெளிப்படுத்துக.

*அல்லது*

ஈழத் தமிழ் மக்கள் பேச்சிலுள்ள தனித்தன்மையான சொல், தொடர் வழக்குகளை விளக்குக.

50. சிறுதெய்வ வழிபாட்டுமுறை பண்டைக்காலத்தில் நிலவியதைப் பேராசிரியர் ச. கணபதிராமன் எவ்வாறு நிறுவுகிறார் ?

*அல்லது*

ஆபிரகாம் பண்டிதரின் இசைப்பணி குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers